රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
**Ministry of Public Administration and Home Affairs**

නිදහස් චතුරස්‍රය, කොළඹ07.சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.Independence Square, Colombo 07.

දුරකථන / தொலைபேசி / Telephone :(94) 011-2696211-13
ෆැක්ස් / பெக்ஸ் / Fax : (94) 011-2695279
ඊ-මේල් / இ-தபால் / E - mail : secretary@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணைத்தளம் / Web Site : www.pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No : 76/1/15/ විශේෂ V වෙළුම
ඔබේ අංකය / உமது இல / Your No :
දිනය / திகதி / Date : 2014.06.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்

பிரதம செயலாளர்கள்

மாவட்ட செயலாளர்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களை**

**விசேட தரத்திற்குத் தரமுயர்த்துதல்.**

**2013.12.31** ஆம் திகதிய **1842/2** இலக்க வர்த்தமானியில் (அதிவிசேட) அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கபட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமானக் குறிப்பின் அட்டவணை **II** இன் பிரிவு **2.14** இல் குறிப்பிடபட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 2013.01.01 ஆந்திகதியிலிருந்து 2014.01.01 ஆம் திகதிவரை விசேடதரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணியில் ஏற்கனவேயுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு சேவை மூப்பு தொடர்பான தகமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியானது வழங்கபட்டுள்ளது

**02.** அதற்கிணங்க இலங்கை நிர்வாக சேவையின் விசேடதரத்தில் ஏற்கனவேயுள்ள **62** வெற்றிடங்களை நிரப்புவதற்கென தகைமைகளைப் பூர்த்தி செய்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு சேவை மூப்பு பட்டியலின் ஒழுங்கிற்கமைய அலுவலர்கள் **124** பேரை நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கபட்டு வருகின்றது.

**03.** விசேட தரத்திற்குத் தரமுயர்த்தப்படுவதற்காகப் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகிரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டங்களை வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகிரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து வழங்கபடும் பொது நிர்வாகம், முகாமைத்துவம், அரசாங்கக் கொள்கைகள், மனிதவள முகாமைத்துவம், பொருளியல், அபிவிருத்திப் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, சட்டம், நிதி முகாமைத்துவம், கருத்திட்ட திட்டமிடலும் முகாமைத்துவமும், தகவல் தொழிநுட்பம் அல்லது இலங்கை நிர்வாக சேவையிலுள்ள அலுவலர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பன்முக முகாமைத்துவ தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கென அறிவினையும் திறன்களையும் பொற்றுக்கொள்வதற்கு

பொருத்தமானதாக அரசாங்க நிர்வாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட வேறு துறைகள் போன்ற துறைகளில் ஆகக்குறைந்தது ஒன்றிலேனும பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும

(ii) பதவியுயர்த்தப்படுவதற்கு உரிய அலுவலர்கள் தகைமை பெறுகின்ற திகதியில் சேவையின் தரம் **(I)** ஒன்றில் ஐந்து **(05)** வருட முனைப்பானதும் **மற்றும்** திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் **மற்றும்** தரம் **(I)** ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட பின்னர் ஐந்து **(05)** சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்த.

(iii) பதவியுயர்வுக்கான தகைமையைப் பெறுகின்ற தினத்தில் சேவையில் பதினெட்டு **(18)** வருடங்களுக்கு குறையாத முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க தரமுயர்த்துதலுக்கான தகைமையைப் பெற உரிய திகதிக்கு உடன் முந்திய ஐந்து **(05)** வருடங்களிலும் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது உயர்வான மட்டத்தில் இருத்தல்.

(v) பதவியுயர்த்தப்படுவதற்கான தகைமையைப் பெறுகின்ற தினத்திற்கு உடன் முந்திய ஐந்து **(05)** வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு இலக்காகாமல் இருத்தலும்..

04. தரமுயர்த்தும் முறை

4.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 03 பேரைக் கொண்ட தெரிவுக்குழு ஒன்றின் ஊடாக முன் வைக்கப்படும் அவதானிப்புக்களின் பின்னர் விசேட தரத்திற்குத் தரமுயர்த்துவதற்கான சிபாரிசுகள் முன் வைக்கப்பட்டதன் அடிப்படையில் அதற்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.2 அலுவலர்களின் சேவை மூப்பு தொடர்பான கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு, விசேட தரத்திற்கான தரமுயர்வுகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு தரமுயர்வுத் திகதிக்குமான சேவை மூப்புப்பட்டியல், அத்தினங்களில் தரமுயர்வு பெறுவதற்கு தகைமை பெறும் அலுவலர்கள் தரமுயர்வுக்கு முன்னர் பெற்றிருந்தசேவை மூப்பு ஒழுங்கு முறைப்படி, தயாரிக்கப்படும்.

05. 2013.01.01 ஆந்திகதியிலிருந்து 2014.01.01 ஆம் திகதிவரை சகல வெற்றிடங்களுக்கும் தரமுயர்த்த படுவதால் ஓவ்வொரு அலுவலரும் அவர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதிக்கும் மற்றும் 2014.01.01 திகதிவரையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்கப் பூர்த்திப் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அமைச்சுக்களின் செயலாளர்களின் ஊடாக, பிரதம செயலாளர் ஊடாக, மாவட்ட

செயலாளர் ஊடாக திணைக்களத் தலைவர்களின் ஊடாக 2014.07.07 ஆந்திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்படமாட்டாது. குறைபாடுகளைக் கொண்ட மற்றும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. தற்போது ஓய்வு பெற்றிருந்த போதிலும் தரமுயர்வு பெறுவதற்குத் தகைமை பெறும் தினம் வரை அல்லது அதற்குப் பின்னரான ஒரு தினம் வரை சேவையில் இருந்த, மேலே பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தரமுயர்வுக்கான தகைமைகளைக் கொண்டுள்ள, முன்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தரமுயர்வு பெறாத, அல்லது விண்ணப்பத்திராத அலுவலர்களும் இத்தரமுயர்வுக்காக விண்ணப்பிக்க முடியும்.

07. உரிய திகதியில் இலங்கை நிர்வாக சேவையின் விசேடதரத்திற்கு பதவியுயர்த்த படுவதற்கு தேவை படுத்த பட்ட தகைமைகளை அலுவலர்கள் பூர்த்தி செய்யாதிருந்தால் தங்களின் பரிந்துரையுடன் அதனை எனக்கு சமர்ப்பிக்கும் படி தங்களுக்கு தயவுடன் அறியத்தரப்படுகின்றது

08. தயவு செய்து இது தொடர்பில் உரிய அலுவலர்களுக்குத் தெரியபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

09. www.pubad.gov.lk இலங்கை நிர்வாக சேவை என்பதன் ஊடாக உரிய விண்ணப்பபடிவம் கோரப்படும் பெயர் பட்டியல் மற்றும் ஏனைய மாதிரிகளின் மென்பிரதிகள் தரவிறக்கம் செய்து கொள்ளப்பட முடியும்

ஒப்பம்/ பீ.பி.அபேகோன்.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு